செய்தி வெளியீடு எண் : 1597 நாள் : 04.10.2024

செய்தி வெளியீடு

# சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தின் செயல்பாடுகள் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (4.10.2024) சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, அதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் 24 மணி நேரமும் இயங்கி வரும் அவசர அழைப்பு மையத்தில், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்கள் மீது எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைக் கேட்டறிந்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், புகார்களுக்கு உடனடியாக தீர்வு காண அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், மழை அளவு சேகரிக்கப்படும் முறை, வானிலை முன்னெச்சரிக்கை வழங்கப்படும் முறை, பேரிடர் காலத்தில் பல்துறை அலுவலர்களின் செயல்பாடுகள் ஆகியன குறித்தும் கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள "TN Alert" செயலியில் உள்ள வானிலை முன்னறிவிப்பு, பெறப்பட்ட மழை அளவு ஆகியன குறித்து ஆய்வு செய்தார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள், இச்செயலியின் மூலம் பொதுமக்கள், வானிலை முன்னெச்சரிக்கை, மழைமானி வாரியான தினசரி பெறப்பட்ட மழை அளவு, நீர் தேக்கங்களின் தற்போதைய நீர் இருப்பு விவரம், தங்களது இருப்பிடம் வெள்ள அபாயத்திற்கு உட்பட்டதா போன்ற தகவல்களை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்பது குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பேரிடர் மேலாண்மையில் முக்கிய பங்கு வகிக்கும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள TN– SMART இணையதள வசதி குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர், சென்னை நிகழ் நேர வெள்ள முன்னறிவிப்பு அமைப்பு மற்றும் பொதுவான எச்சரிக்கை நடைமுறையின் செயல்பாட்டையும் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் முன்னெச்சரிக்கை வழங்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், எதிர்வரும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில், அனைவரும் விழிப்புடன் இருந்து, பொதுமக்களுக்கு உரிய முன்னெச்சரிக்கை வழங்கி, விரைவாக தேடல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைளை மேற்கொள்ள தேவையான அனைத்து வகையான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களது ஆய்வின் போது, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ,ப., பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு.வ.மோகனச்சந்திரன்,இ.ஆ.ப., உள்ளிட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

அரசு முதன்மை செயலாளர்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu